வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 16.10.2025 வியாழக்கிழமை | இதழ் : 289 | பக்கங்கள் : 08

# வடமாகாண சபையை தமிழர் தரப்பு கூட்டாக கைப்பற்றுவதற்குத் திட்டம்!

## தமிழ்க்கட்சிகள் யாழ்.நகரில் நேற்று கூடி ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16

வடக்கு மாகாண சபையை இம்முறை தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டாக கைப்பற்றுவது குறித்து கட்சிகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று கூடி விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக போட்டியிட்டு எவ்வாறு வடக்கு மாகா ணத்தை கைப்பற்றுவது என்பது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது. வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தலைமையில் தமிழ்க் கட்சிகளின் கூட்டம் மாலை 3.00 மணியளவில் இடம் பெற்றது.

07



வடக்கு ஆளுநர் செயலகம் முன்பாக

# மூன்றாவது நாளாகவும் ஆசிரியர்கள் போராட்டம்

- த.பிரதீபன், பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 16


வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் சேவையின் தேவை கருதி என மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தை உடன் இடைநிறுத்தி மீள மேற்கொள்ள வேண்டும் என கோரி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மூன்றாவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட் டனர்.

நேற்று மதியம் ஆளுநர் செயலகத்தை முடக்கி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

07

# தனியாரின் வீடுகளில் இருந்து நேற்று கோப்பாய் பொலிஸார் வெளியேற்றம்

## 30 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் சொந்த நிலத்தில் உரிமையாளர்கள்



- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக். 16

கோப்பாய் பொலிஸார் நீதிமன்ற உத்தரவில் வெளியேற்றப்பட்டமையால் கோப்பாய் பொலிஸ் நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையம், இராசபாதையில் தனியாருக்கு

07

# இடமாற்றத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் 27ஆம் திகதிவரை மேன்முறையீடு செய்யலாம்

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட, 2026ஆம் ஆண்டுக்கான சேவையின் தேவை கருதிய ஆசிரியர் இடமாற்றப்பட்டியல் வெளியாகியுள்ள நிலையில் அதில் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கருதும் எந்தவோர் ஆசிரியரும் மேன்முறையீடு மேற்கொள்ள முடியும் எனவும், மேன்முறையீடு எதிர்வரும் 22 ஆம் திகதியுடன் நிறைவடைய இருந்த நிலையில், ஆசிரியர்களின் நலன் கருதி எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் விசேட கலந்து ரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன் கிழமை மாலை நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தலைமையிலான மேன்முறையீட்டு

07

# பிரதமர் ஹரிணி இன்று இந்தியாவுக்கு பயணம்!

கொழும்பு, ஒக். 16

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ள உள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதமர் இன்று முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கிறார்.

07

# மனுஷ நாணயக்காரவுக்கு பிணை!



கொழும்பு, ஒக். 16

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிக ளால் நேற்று புதன் கிழமை கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வேலை வாய்ப்புக்காக முறையற்ற வகையில் இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்தல் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக

07

# சுன்னாகம் பொலிஸார் இருவரை இடமாற்றம் செய்ய நடவடிக்கை!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 16

சட்டவிரோதமான முறையில் பணத்தை ஈட்டியதாக சந்தேகிக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால மேற்கொண்டு வருகின்றார்.

அவர்களிடம் சந்தேகிக்கப்படும் அளவுக்கு ஒரு தொகை பணம் காணப்பட்டதால்

07

# அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானம் தாமதமின்றி ஆரம்பம்

## அரசிடம் உறுதிப்படுத்தியது சினோபெக்

கொழும்பு, ஒக். 16

அம்பாந்தோட்டையில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகள் எந்தத் தாமதமும் இன்றி ஆரம்பிக்கப்படும் என சீனாவின் சினோபெக் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

வெளிவிவகார அமைச்சில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடனான சந்திப்பின்போது, சீனாவின் சினோபெக் குழுமத்தின் துணைத் தலைவர் ல்வ் லியாங்கோங்

07

# அனுமதி பெறாத நிதி நிறுவனங்கள் வேலணைக்குள் உள்நுழையத் தடை!

- பு.கஜிந்தன்,த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக். 16

வேலணைப் பிரதேச சபையின் ஆளுகைக்குள் நுண்கடன் நிறுவனங்கள் தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமானால் பிரதேச சபையின் அனுமதி பெற்றே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று தவிசாளர் சிவலிங்கம் அசோக் குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நுண்கடன் தொல்லையால் பிரதேச

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரதீவில் 48 கிலோ கஞ்சாவுடன் வவுனியாவை சேர்ந்த இருவர் கைது

கிளிநொச்சி, ஒக். 16

பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கேரதீவு பகுதியில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 48 கிலோ 400 கிராம் கஞ்சாவுடன் வவுனியாவைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக வீதி சோதனையின்போது இவர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)





# சிவ பூதநாதேஸ்வரருக்கு பால்குடப் பவனி!

யாழ்ப்பாணம், ஒக். 16

உரும்பிராய் கிழக்கு , கரந்தன், நீர்வேலி எல்லைப் பகுதியில் உள்ள மனோன்மணி அம்பாள் சமேத சிவ பூதநாத ஈஸ்வர ஆலய பால்குடப்பவனி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

உரும்பிராய் கிழக்கு காளியம்மாள் ஆலயத்தில் இருந்து காலை 7.00 மணிக்கு பாற்குடப் பவனி ஆரம்பமாகி சிவ பூதநாதேஸ்வரர் ஆலயத்தை சென்றடைந்தது.

அந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் நிறைவுற்று அதன்பின் இடம்பெற்ற 45 நாள் மண்டல அபிஷேகத்தின் இறுதி நாளான நேற்று முன் தினம் 1008 சங்குகளால் சங்காபிஷேகம் இடம்பெற்ற இந்நாளில் சிவபெருமானுக்கு அடியவர்களால் பாற்குடப்பவனி நேர்த்தியுடன் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

# யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் கடைகள் வாடகையால் இ.போ.சவுக்கு மாதாந்தம் 9 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா!

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய வளாகத்தை சுற்றியுள்ள கடைகள் மூலம் இலங்கை போக்குவரத்துச் சபையினர் மாதாந்தம் 9 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பணத்தை கடை வாடகை வருமானமாக பெற்றுக்கொள்கின்றனர் என இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் கே.கேதீசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தின் இயங்குநிலை தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

அக் கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட 63 கடைகளிலிருந்தும் நாளொன்றுக்கு தலா 500 ரூபா வீதம் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரின் அனுமதியுடன் வாடகை அறவிடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நாம் புதிய பஸ் நிலையத்துக்குச் செல்வது தொடர்பில் எமது தொழிற்சங்களை அழைத்துக் கலந்துரையாட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. நகர அபிவிருத்தி அதிகார சபையினர் தமது முன்மொழிவுகளையும் தெரியப்படுத்தினர்.

புதிய பஸ் நிலையத்தை இயங்கச் செய்வது தொடர்பில் முதலில் கள ஆய்வை மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், க. இளங்குமரன், நகர அபிவிருத்தி அதிகார சபையினர், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினர், வர்த்தகர் சங்கத்தினர், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (அ)

# கால்நடை வைத்திய அதிகாரி ஒருவரை ஒப்பந்த அடிப்படையிலாவது நியமிக்குக!

## யாழ். மாநகரின் முன்னாள் முதல்வர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 16

கால்நடை வைத்திய அதிகாரியை ஒப்பந்த அடிப்படையிலாவது நியமிக்க வேண்டும் என கோரிக்கைவிடுத்த யாழ். நகரின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, அதற்கான தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் முதல்வர் மதிவதனி தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதன்போது மேற்கண்டவாறு வலியுறுத்திய அவர், மாநகர சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது. அவ்விடயங்கள் குறித்து ஆளுநரிடம் முறையாகக் கோரும் பட்சத்தில் அதை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே யாழ். மாநகரின் 10ஆம் வட்டாரத்தில் துரும்பங்குளம் தூர்வாராமல் இருப்பதால் மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் அதனால் பெரும் அசௌகரியங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அந்த வகையில் குறித்த குளத்தை துரிதமாக தூர்வார நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், யாழ். மாநகர சபைக்குரிய காணியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்காமல் யாழ். மாநகர சபையே பொறுப்பேற்று அதன் வருமானத்தையும் ஈட்டலாம் என்று வலியுறுத்திய முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, வேம்படி சந்தியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றால் ஏற்படும் சன நெருக்கடியை குறைக்க நடவடிக்கை எடுப்பது அவசியம் என ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியும் அது ஏன் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை என்றும் கேள்வி எழுப்பினார். (அ-05)

# சர்வதேச வெண்பிரம்பு தினத்தை கிளிநொச்சியில் நேற்று பேரணி

கிளிநொச்சி, ஒக். 16

சர்வதேச வெண்பிரம்பு தினத்தை முன்னிட்டு, வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நடைபெற்றது.

இந்தப் பேரணி, "விழியின் இழப்பு வாழ்வின் இழப்பல்ல எங்கள் உரிமைக்காக என்றும் குரல் கொடுப்போம்" என்ற தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. பேரணியில் விழிப்புலனற்றவர்கள் பல பங்கேற்றனர். (அ)

# உருத்திரபுர சிவன் ஆலயத்தின் பசுக்கள் இறைச்சிக்கு விற்பனை

## அறங்காவலர்சபை குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஒக். 16

கிளிநொச்சி - உருத்திரபுர சிவன் ஆலயத்தின் நல்ல இன பசு மாடுகள் இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அந்த ஆலயத்தின் அறங்காவலர் சபை குற்றம்சாட்டியுள்ளது.

அந்த ஆலயத்தின் திருவிழாவுக்கு என ஒரு நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது. அந்த குழு அறங்காவலர் சபையின் கீழ், திருவிழா காலத்தில் மட்டுமே செயற்படும் வண்ணம் தெரிவு செய்யப்பட்டது.

திருவிழா நிறைவடைந்த பின்னரும் அந்த நிர்வாகம் தொடர்ந்து செயற்படுவதாகவும், அந்த நிர்வாகம் ஆலயத்தின் செயற்பாடுகளில் தன்னிச்சையாக தீர்மானம் எடுப்பதாகவும் அறங்காவலர் சபையால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு நேர்த்திக்காக வழங்கப்பட்ட நல்ல இன பசு மாடுகள் இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டதாகவும், இவ்வாறு விற்பனை செய்த 20 இலட்சம் ரூபா பணம் இதுவரை வங்கிக் கணக்குக்கு வைப்புச் செய்யப்படவில்லை எனவும் குற்றம் சாட்டப்படுகிறது.

உரிய அதிகாரிகளுக்கு இது குறித்து தெரியப்படுத்தியும் அவர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

எனவே திருவிழா குழு ஆலயத்தின் நிர்வாக நிறைவேற்று குழு போன்று செயற்படுவதை தடுக்குமாறும், அந்த குழுவின் காலப்பகுதி நிறைவடைந்தமையால் அந்த குழுவைக் கலைக்குமாறும், இந்து கலாசார திணைக்களம் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (அ-05)

# போதைப்பொருட்கள் கைமாற்றும் இடமாக பச்சிலைப்பள்ளி பிரதேசம்

## பிரதேச சபைத் தவிசாளர் சுரேன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஒக். 16

தற்போது பச்சிளைப்பள்ளி பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகம் இடம் பெற்று வருவதாகவும் அதனை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளதாகவும் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் இடம்பெறும் சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுடன் பச்சிலைப் பள்ளி பொலிஸார் நல்ல உறவு முறையில் உள்ளனர் எனவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அண்மைக் காலங்களில் சட்டவிரோதமான மணல் அகழ்வு அதிகம் இடம் பெற்று வருகின்றது. இந்த பிரதேசத்தில் மட்டுமன்றி வடக்கில் பல பிரதேசங்களில் மணல் அகழ்வு நடவடிக்கைகள் மிகவும் மோசமாக நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்று எழுதினேன். பச்சிலைப்பள்ளி பொலிஸாரின் நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை. ஏனெனில் நாளுக்கு நாள் சட்ட விரோதமான செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன. இதனை கட்டுப்படுத்துவதற்கு விசேட ஏற்பாடு ஒன்றை செய்யவேண்டும் என கோரினேன். ஆனாலும் பொலிஸ்மா அதிபரும் இதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சட்டவிரோதமான மணல் அகழ்வு செயற்பாடு மட்டுமின்றி இன்னொரு புறம் இளைஞர்களைப் போதைக்கு அடிமையாக்கும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. அந்த போதைப்பொருள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுடன் பளை பொலிஸார் நல்ல உறவு முறையில் உள்ளனர்.

மருதங்கேணியில் இருந்து வரும் போதைப்பொருள்களை கை மாற்றும் இடமாக பச்சிலைப்பள்ளி பிரதேசம் காணப்படுகின்றது.

மணலை ஏற்றிக்கொண்டு செல்லும்போது வீதி ஓரங்களில் மணல்களை கொட்டிவிட்டு செல்கின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. எனவே பொலிஸார் எதிர்காலத்தில் மிகப் பொறுப்போடு செயற்படவேண்டும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
16.10.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# ஜெனிவா கதை எவ்வளவு காலத்திற்கு?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறுபதாவது கூட்டத் தொடரில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்கெடுப்பைக் கோரவில்லை. இதன் காரணமாகவே வாக்கெடுப்பின்றி குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விமர்சிப்பவர்களின் பார்வையில் அரசாங்கத்திற்கு வெளிவிவகாரக் கொள்கையில் அனுபவம் போதாது - இதன் காரணமாகத்தான் இவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்றவாறு வாதிடுகின்றனர். ஆனால், அரசாங்கமோ அதற்கு புதுவிதமான விளக்கமொன்றை வழங்கியிருக்கின்றது. ஜெனிவிவாவில் வாக்கெடுப்பை கோருவதும் அதற்கான லொபிகளில் ஈடுபடுவதும் வீண் பண விரயத்தை ஏற்படுத்துகின்றது.

ஒரு வெளிவிவகார விடயத்தை நாட்டின் பொருளாதாரத்துடன் தொடர்படுத்தும் புதிய கருத்தொன்றை அரசாங்கம் முன்வைக்கின்றது. அதாவது, சாத்தியமற்ற விடயங்களுக்காக எதற்காக நிதியை வீண் விரயம் செய்ய வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் வாதமாக இருக்கின்றது. தர்க்க ரீதியில் நோக்கினால் அரசாங்கத்தின் அணுகுமுறையை மக்கள் வரவேற்பார்கள். ஏனெனில், கடந்த பதினாறு வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் ஒரு பேசு பொருளாக இருக்கின்றது.

இதனை மனித உரிமைகள் சார்ந்த மென்மையான அழுத்தம் என்று புரிந்து கொள்ளலாம். ஆனால், இதனை இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்களும் கைக்கொள்ளவில்லை. அதேவேளை அரசாங்கத்தின் மீது பெரும் அழுதங்களை பிரயோகிக்கக் கூடிய நிலையில் இணையனுசரணை நாடுகளும் இருக்கவில்லை. ஒவ்வொரு முறையும் அமைச்சர் தலைமையில் ஒரு குழுவினர் செல்வதும், ஆடம்பரமாக செலவழிப்பதும் ஆனால், இறுதியில் வாக்கெடுப்பில் தோற்பதுமாகவே இந்தக் கதை நீண்டு சென்றிருக்கின்றது.

இந்தக் கதையை உற்றுநோக்குபவர்கள், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்ததை சரியென்றே புரிந்து கொள்வார்கள். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் உண்மையில் அரசாங்கம் ஜெனிவாவை ஒரு பாரதூரமான விடயமாக நோக்கவில்லை. அத்துடன் அதனை ஒரு விடயமாக நோக்குவதில் பயனில்லை என்னும் அணுகுமுறையின் வெளிப்பாடுதான் வாக்கெடுப்பை கோராமல் விடும் நிலைக்கு அரசாங்கம் செயல்பட்டிருக்கின்றது.

இந்த விடயத்தை தமிழர் தரப்புக்கள் எவ்வாறு புரிந்து கொள்ளப் போகின்றன? யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகளாகிவிட்டன. இந்தக் காலத்தில் ஆண்டுகள் தோறும் ஜெனிவாவிற்கு படையெடுக்கும் படலமும் தொடர்கின்றது. ஆரம்பத்தில் மிகவும் கவர்ச்சிகரமாகத் தெரிந்த ஜெனிவாப் பயணம் காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக மெரு குறையத் தொடங்கியது.

இப்போது முன்னைய கவர்ச்சியின்றி வெறும் உச்சரிப்பாக மாறிவிட்டது. இந்த நிலையில் தொடர்ந்தும் ஜெனிவாவில் மட்டும் காலத்தை செலவிடுவது உசிதமான விடயமா என்பதை தமிழ் தரப்புகள் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டதா? அரசாங்கம் எவ்வாறு வாக்கெடுப்பை கோராமல் அமைதியாக விடயங்களை எதிர்கொள்ள முற்சிக்கும்போது, அதற்கு சமாந்தரமான அணுகுமுறையைத்தானே தமிழர் தரப்புக்களும் கைக்கொள்ள வேண்டும். பிரேரணை எதுவாக இருப்பினும், எவ்வாறான பரிந்துரைகளை நீங்கள் கொண்டுவரினும் அனைத்தையும் நாங்கள் உள்ளுக்குள் பார்த்துக் கொள்வோம் என்பதாகவே அரசாங்கம் ஒரு புதிய அணுகுமுறையை கைக்கொள்ள எத்தணிக்கின்றது. இப்போது தமிழர் தரப்புகள் என்ன செய்ய வேண்டும்? வெறுமனே முன்னரைப் போல் பிரேரணைக்கு விளக்கமளித்துக் கொண்டிருக்கப் போகின்றனவா அல்லது, உள்நாட்டு பொறிமுறையை முன்னெடுங்கள், அதனை நாங்கள் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம் என்று சமாந்தராமான இராஜதந்திரத்தை கைக்கொள்வது உசிதமானதா? அரசியலில் குறிப்பிட்ட சூழ்நிலை கருதி எடுக்கப்படும் தீர்மானங்களும், அதனை நடைமுறைப்படுத்துவதில் காணபிக்கப்படும் தந்திரோபாயமான அணுகுமுறைகளுமே இறுதியில் வெற்றியை தரும்.

# இலங்கை வரி விதிப்புக் கொள்கைகள் சமத்துவமின்மையை தூண்டுகின்றன!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 16

இலங்கையின் வரி விதிப்புக் கொள்கைகள் நாட்டின் சமூக சமத்துவமின்மையைத் தூண்டுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ள அந்த அமைப்பு, இந்த நிலைமை கல்வி மற்றும் ஏனைய பொதுச் சேவைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை நீண்ட காலமாக பற்றாக்குறையாக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு, வருவாயைப் போதிய அளவு திரட்டாத வரி விதிப்புக் கொள்கைகளே முக்கிய காரணமாக அமைந்தன என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கம் தமது வருவாயில், சராசரியாக 80 வீதத்தை, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வற் போன்ற மறைமுக வரிகளில் இருந்து பெறுகிறது.

இந்த வரிகள் பொதுவாக வறியவர்களின் வருமானத்தில் அதிகப் பங்கை எடுத்துக் கொள்வதால், அவை சமத்துவமின்மையை அதிகரிக்கின்றன. நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட வரி விலக்குகளின் மதிப்பு 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருவாயில் 56 வீதமாக இருந்தது.

இது கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதியைவிட சுமார் மூன்று மடங்கு அதிகமாகும்.

இந்தச் சலுகைகள் செலவு மிக்கதாகவும், அவற்றின் செயல்திறன் கேள்விக்குறியாகவும், தவறாகப் பயன்படுத்தக்கூடியதாகவும் உள்ளன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

சுதந்திரத்திற்குப் பிந்திய ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 வீதம் முதல் 5 வீதமாக இருந்த கல்விக்கான நிதி ஒதுக்கீடு, 2022 ஆம் ஆண்டில் வெறும் 1.5 வீதமாகக் குறைந்துள்ளது.

இந்த தொகையானது உலகிலேயே கல்விக்காக ஒதுக்கப்பட்ட மிகக் குறைந்த தொகைகளில் ஒன்றாகும்.

நிதிப் பற்றாக்குறை காரணமாகப் பல பாடசாலைகள் அடிப்படைக் கட்டணங்களை வசூலிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே, புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம், மனித உரிமைக் கடமைகளை நிலைநிறுத்தவும், சீர்திருத்தங்களைச் செயல்படுத்தவும் அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அதிக செலவு மற்றும் ஊழலுக்கு வாய்ப்பளிக்கும் பெருநிறுவன வரி விலக்குகளை நீக்குவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். சொத்து வரி போன்ற பிற முற்போக்கான வரி விதிப்பு நடவடிக்கைகளை ஏற்க வேண்டும்.

கல்விக்கான பாதீட்டு ஒதுக்கத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 வீதம் முதல் 6 வீதம் என்ற சர்வதேச இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டு அதிகரிக்க வேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அபிவிருத்தி மாத்திரம் மனித உரிமைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானது அல்ல.

எனவே, அரசாங்கம் இறுதியாக முற்போக்கான வரி முறையொன்றை உருவாக்கி, அதன் வருவாயை அனைத்து இலங்கையர்களுக்கும் பயனளிக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சிரேஷ்ட பொருளாதார ஆய்வாளர் சாரா சாடூன் வலியுறுத்தியுள்ளார். (அ)

# இவ்வருட அபிவிருத்தி நிதியை மீண்டும் திறைசேரிக்குக் கையளிக்கவேண்டாம்!

## ஜனாதிபதி அநுர அறிவுறுத்தல்

கொழும்பு, ஒக். 16

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களின் நன்மைகளை மக்களுக்கு வழங்குவதில், அரச அதிகாரிகள் ஒரு முக்கிய இடைத்தரகர்களாக தங்களின் பொறுப்பை முறையாக நிறைவேற்ற வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இந்த நிதியாண்டுக்கான அபிவிருத்தி நிதியை திறைசேரிக்கு மீண்டும் கையளிக்க வேண்டாம் என அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இங்கு2025 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நடைமுறைப்படுத்தலில் உள்ள சிக்கல்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிதியாண்டிற்கான அபிவிருத்தி நிதியை திறைசேரிக்கு மீண்டும் கையளிக்க வேண்டாம் என அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

மேலும், அம்பாந்தோட்டை சார்க் கலாசார நிலையம் மற்றும் அநுராதபுரம் கேட்போர் கூடம் போன்ற பல கட்டடங்கள் பராமரிப்பின்றி உள்ளதையும், அவற்றை பராமரிக்க எந்தவொரு நிறுவனமும் முன்வராத நிலையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய நிறுவனங்களை தனியார் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது பொருத்தமான அணுகுமுறை எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். திருப்தி.உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும்.வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**சிம்மம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். சில புதுமைகளை செய்து கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**கன்னி**
நண்பர்களால் அனுகூலம் உண்டு. கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும்.

**துலாம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். தொழிலில் லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மகரம்**
சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மீனம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். ஒத்துழைப்பு அதிகரிக்கும்.சிந்தனை திறன் வெளிப்படும் நாள்.

# நெரிசல், நெருக்கடி கொண்டதாக யாழ்ப்பாணம் நகரம் மாறியுள்ளது

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணம் நகரம் நெரிசல் மற்றும் நெருக்கடி கொண்டதாக மாறியுள்ளது. இதனை ஒழுங்கமைக்க - சீரமைக்க வேண்டியதேவை, பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள நெடுந்தூர பஸ் தரிப்பு நிலையத்தை மீள இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணம் நகரம் நெரிசல் மற்றும் நெருக்கடி கொண்டதாக மாறியுள்ளது. இதனைத் தவிர்க்க நெடுந்தூர, குறுந்தூர பேருந்துச் சேவைகள் புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்களிலிருந்து இயக்கப்பட வேண்டியுள்ளது- என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், பொதுப் போக்குவரத்தை மக்களின் தேவைக்காக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம். தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை என்பன இணைந்து செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பஸ் தரிப்பு நிலையம் தொடர்பில் தற்போது எதிர்கொள்ளப்படும் இடர்பாடுகள் தொடர்பாகவும் இதனை ரயில் நிலையத்துக்கு அருகில் இடமாற்றம் செய்வதில் உள்ள சவால்கள் தொடர்பிலும் பல்வேறு துறைசார்ந்த அதிகாரிகளின் கருத்துக்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன. எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு இது தொடர்பில் நேரடி கள விஜயம் மேற்கொண்டு மேலதிக தீர்மானங்கள் எட்டப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. நகர அபிவிருத்தி அதிகார சபையினர் தமது முன்மொழிவுகளையும் தெரியப்படுத்தினர்.

(எ)

# அனர்த்த முகாமைத்துவம் பற்றி யாழில் விசேட பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், ஒக். 16

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறை யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தலைமையிலும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் பங்குபற்றுதலுடனும் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், எதிர்பாராத வகையில் அனர்த்தம் ஒன்று நிகழும்போது எடுக்கப்படும் முடிவானது விரைவாகவும் வினைத்திறனாகவும் இருக்கும்போது அந்தச் செயல்பாடு பூரண வெற்றியளிக்கும். இப்பயிற்சிப் பட்டறை அனுபவங்கள் மற்றும் நாளாந்த கடமைகளுடன் இணைந்ததாகவும் குறிப்பாக முடிவெடுக்கும் திறன் குறித்த பிரதேசத்தின் கட்டுப்பாட்டு அதிகாரிகளான பிரதேச செயலாளர்களுக்கு உள்ளதெனவும் தெரிவித்தார்.மேலும், கடந்த கால அனுபவங்கள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களிலிருந்து சில விடயங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

எடுக்கப்படும் முடிவுகள் விரைவானதாகவும் சரியானதாகவும் அமைவதுடன் அதற்கு அனைவரும் ஒருங்கிணைந்த வகையில் செயல்படல் அவசியம். எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள அனர்த்த முகாமைத்துவ ஒத்திகை நிகழ்வு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கி எமது மாவட்டத்தில் எதிர்பாராமல் நிகழும் அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாக்க ஒவ்வொருவரும் தத்தமது கடமைக்கூறுகளை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அத்தோடு, அனர்த்தம் ஒன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் முடிவெடுக்கும் திறனை வளர்த்துக் கொள்ளல், எடுக்கப்படும் முடிவுகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பது தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இதில், மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், பிராந்திய சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், ஆசிரியர்கள், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(எ)

# ஞாயிற்றுக்கிழமைகளில் நெடுந்தீவுக்கான வடதாரகை படகு போக்குவரத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 16

ஞாயிற்றுக்கிழமைகளில் நெடுந்தீவுக்கான படகு போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது ஞாயிற்றுக்கிழமைகளில் நெடுந்தீவுக்கான வடதாரகை மற்றும் நெடுந்தாரகை படகு போக்குவரத்து விடுமுறை நாளாக கருதி தவிர்க்கப்பட்டிருந்தது. ஆனாலும், நெடுந்தீவு பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினுடைய படகு பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செல்வுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருத்த வேலைக்கு அனுமதிக்கப்பட்டுள் ளமையால் நெடுந்தீவு மக்களின் போக்குவரத்தை இலகுவாக்குவதன் பொருட்டு அரசாங்க அதிபர் முன்வைத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம் நெடுந்தீவிலிருந்து காலை 06. 30 மணிக்கு புறப்பட்டு காலை 07.30 மணிக்கு குறிகாட்டுவானை வந்தடையும். குறிகாட்டுவானிலிருந்து மீண்டும் காலை 07.30 மணிக்கு நெடுந்தீவு நோக்கிப் புறப்படும். மீண்டும் பிற்பகல் 03.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து புறப்பட்டு குறிகாட்டுவான் வந்தடையும். மாலை 04.30 மணிக்கு நெடுந்தீவு புறப்படும்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட போக்குவரத்து தொடர்பான செயல்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. இளங்குமரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் யொ. குறுஸ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 40 மோட்டார் எறிகணைகள் மீட்பு

கிளிநொச்சி, ஒக். 16

கிளிநொச்சி, பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலை வடக்கு பொந்தர் குடியிருப்புப் பகுதியில் வீட்டுக் காணி ஒன்றை துப்புரவு செய்யும் போது அடையாளம் காணப்பட்ட 40 எறிகணைகள் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

பனங்கிழங்கு பாத்தி ஒன்றை அமைப்பதற்காக மண்ணை வெட்டிய போது இந்த வெடிபொருட்கள் காணப்பட்டன.

இவ்வாறு வெடிபொருட்கள் காணப்படுவது தொடர்பில் பளைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக குறித்த பகுதியில் அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்ட போது வெடிக்காத நிலையில் காணப்பட்ட 40 மோட்டார் எறிக்கணைகள் மீட்கப்பட்டன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கு கடலில் மீட்ட பொதிகளில் 839 கிலோ போதைப்பொருட்கள்!

கொழும்பு, ஒக். 16

**தெற்கு கடலில் கைப்பற்றப்பட்ட பொதிகளில் மொத்தம் 839 கிலோ கிராம் போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.**

இவற்றில்: 670 கிலோ கிராம் ஐஸ், 156 கிலோ கிராம் ஹெரோயின், 12 கிலோகிராம் ஹஷீஷ் போதைப்பொருட்கள் அடங்குகின்றன.

தெற்கு கடலில் மிதந்து வந்த நிலையில் நேற்று முன்தினம் சுமார் 50 பொதிகள் மீட்கப்பட்டன.

இந்தப் பொதிகள் நேற்று முன்தினம் மாலை தங்காலை மீன்பிடித் துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டன.

3 பொதிகளில் ஹெரோயின் இருப்பதாகவும், மற்ற 48 பொதிகளிலும் ஐஸ் ரக போதைப்பொருள் இருப்பதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவை உனாகுருவே சாந்த என்ற போதைப்பொருள் கடத்தல்காரருக்குச் சொந்தமானவை என சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாத தொடக்கத்தில், மூன்று படகுகள் மூலம் போதைப்பொருட்கள் நாட்டுக்குள் கடத்தப்படவுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமல் பிரசாந்தவுக்கு தகவல் கிடைத்திருந்தது.

இதனையடுத்து, பொலிஸ் மா அதிபரின் மேற்பார்வையில், கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் பணியகம் தேவேந்திரமுனை மற்றும் தங்காலை கடல் பகுதிகளில் 32 நாட்கள் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சம்பந்தப்பட்ட படகுகளுடன் தொடர்பு கொள்ள முயற்சித்த போதிலும், எந்தவித தகவலும் கிடைக்கவில்லை. படகுகளின் இருப்பிடத்தைக் கண்டறிய பயன்படுத்தப்படும் வி. எம். எஸ். அமைப்பு செயலிழக்கச் செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விமானப்படையின் உதவியும் பெறப்பட்ட போதிலும், இந்த மூன்று படகுகள் தொடர்பான எந்தவித தகவலும் கிடைக்கவில்லை.

எனவே, இந்தப் பொதிகள் சந்தேகநபர்களால் கடலில் வீசப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (எ)

# எகிறியது தங்கம் விலை

கொழும்பு, ஒக். 16

இலங்கையில் தங்கத்தின் விலை நேற்று 5,000 ரூபாயால் அதிகரித்ததாக சந்தைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, நேற்றுக் காலை கொழும்பு செட்டியார் தெரு தங்கச் சந்தையில் 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 342,300 ரூபாயாக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 337,600 ரூபாயாக காணப்பட்டது.

இதற்கிடையில், நேற்று முன்தினம் 365,000 ரூபாயாக இருந்த 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை நேற்று 370,000 ரூபாயாக உயர்ந்துள்ளதாக கொழும்பு செட்டியார் தெரு தங்கச் சந்தை தரவுகள் மேலும் தெரிவிக்கின்றன. (எ)

# பிரதமர் ஹரிணி நாடு திரும்பினார்



கொழும்பு, ஒக். 16

சீனாவுக்கான உத்தியோக பூர்வ பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையம் வழியாக நாட்டை வந்தடைந்தார்.

சீனாவின் பீஜிங்கில் நடைபெற்ற "பெண்கள் தொடர்பான உலகளாவிய தலைவர்கள் உச்சி மாநாடு 2025" இல் பங்கேற்பதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய கடந்த 11 ஆம் திகதி இரவு நாட்டை விட்டு புறப்பட்டு சென்றிருந்தார்.

இந்த பயணத்தின் போது, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் பிரதமர் லி கியாங் ஆகியோருடன் பிரதமர் ஹரிணி இருஇருதரப்பு கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையில் பிரதமர் நேற்று அதிகாலை 04.45 மணிக்கு சீனாவின் குவாங்சோவிலிருந்து சிறீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் நாட்டை வந்தடைந்தார். (எ)

# மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டத்தரணி வன்னிநாயக்க மனு

கொழும்பு, ஒக். 16

தன்னைக் கைது செய்வதைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்கக் கோரி, சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க, தனது சட்டத்தரணிகள் மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பொலிஸ் மா அதிபர், கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட பலர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

அண்மையில், கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தன்னை சட்டவிரோதமாகக் கைது செய்யத் தயாராகி வருவதாக வன்னிநாயக்க தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தன்னைக் கைது செய்வதைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறு அவர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார். (எ)

# கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 16

கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட போக்குவரத்து தொடர்பான செயல்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. இளங்குமரன் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபரும் ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளருமான ம. பிரதீபன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, யாழ். மாவட்டத்தில் போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 1000 மில்லியன் ரூபாய் நிதியில் 24 வீதிகள் 26.5 கிலோ மீற்றர் அளவில் புனரமைக்கப்படவுள்ளது. இவ் வீதிகளினுடைய முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்ட போது வீதிகளுக்குரிய மதிப்பீடுகள் தயாரிக்கின்ற பணிகளும் அதற்கான கேள்விப்பத்திரங்களும் திரட்டப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டதுடன் இம் மாதத்தினுடைய இறுதி வாரத்தில் வீதியின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுமென வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் யொ. குறுஸால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வேலணை, ஊர்காவற்துறை , காரைநகர் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து, பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 250 மில்லியன் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக முன்னெடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்தோடு. நகர அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற 184 மில்லியன் ரூபாய் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (எ)

# வங்கி கணக்கிலிருந்து 569,610 ரூபாய் மோசடி

## நால்வர் கைதாகினர்

கொழும்பு, ஒக். 16

2024 மே 29 ஆம் திகதியன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வடமேல் மாகாண கணினி குற்றப்பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், வங்கிக் கணக்கு ஒன்றிலிருந்து 569,610 ரூபாய் மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்டவர்கள் 30 மற்றும் 38 வயதுடைய தெஹிதெனிய மற்றும் முருதலாவ பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் இணையத்தளத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த நீர் மோட்டார் ஒன்றை வாங்குவதாகக் கூறி, அதற்காக முன்பணம் செலுத்துமாறு, விற்பனையாளரின் வங்கிக் கணக்கின் ஓ.ரி.பி. இலக்கத்தைப் பெற்று, பணத்தை மோசடி செய்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பண மோசடி, தவறான பயன்பாடு மற்றும் நம்பிக்கைக்கு புறம்பாக நடந்து கொள்ளல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் ஒருவரும், அவருக்கு உதவிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)


# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : கந்தராசா துவாரகன்**
**சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் : தாமோதரம்பிள்ளை**
**முகவரி : ஆதன இல 89, சித்தன்கேணி வீதி, வடலியடைப்பு, வட்டாரம் - 06**

வட்டாரம் 06, சித்தன்கேணி வீதி, ஆதன இல: 89 இல் அமைந்துள்ள ஆதனம் பிரசித்த நொத்தாரிசு து. பாக்கியநாதன் முகதாவில் 12911/2013.02.16 வெளிப்படுத்தல் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று வடலியடைப்பு இறை "சிவிளானை" எனும் பெயருள்ள ஆதனம் நிலப்பரப்பு 8 குளி 3.44ம் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசியும் வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த கந்தையா மகள் நவமணி என்பவர் தனது காலம் சென்ற பேத்தி ஐயாத்துரை பெண் நாகம்மா பரம்பரை பரம்பரையாக சொந்தக் காரியாக இருந்து வந்தார் எனவும் அவர் உயிரோடு இருக்கும் காலத்தில் எவருக்கும் கையளிக்காமல் இறந்த படியினால் அவரின் மகளும் மாதாவுமாகிய கந்தையா சௌந் தரம்மா பாக்கியத்திற்கு முதுச ஆதனமாக வந்தடைந்தது எனவும் அவரும் உயிரோடு இருக்கும் காலத்தில் எவருக்கும் கையளிக்காமல் இறந்த படியினால் இவ் ஆதனம் அவரின் ஒரே மகளான தமக்கு முதுசமாக வந்தடைந்த காலம் தொடக்கம் இவ் ஆதனத்தினை ஆட்சி செய்து வருகிறேன் எனவும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் உறுதிச்சாதனங்கள் தொலைந்தமையினால் நொத்தாரிசு பெயரும் தெரியாத படியினால் தனது முதுச ஆதனமாக வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் 12974/ 2013.03.21 ஆம் இலக்கத்தில் கந்தையா நவமணி என்பவரால் சுப்பிரமணியம் கந்தராசா என்பவருக்கு தத்துவப்பத்திரத்தின் பிரகாரம் வழங்கப்பட்டு பிரசித்த நொத்தாரிசு ஞ.யு. மதுரநாயகம் முகதாவில் 61804/ 2020.11.18 ஆம் இலக்க நன்கொடை உறுதிப்பிரகாரம் கந்தராசா துவாரகனிடம் வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

| | | |
|---|---|---|
| வடக்கு | - | தம்பையா ஜெகதீஸ்வரனின் ஆதனமும் கிணற்றுத்தூர்வையும் |
| கிழக்கு | - | இராசேந்திரம் பெண் மனோரஞ்சிதத்தின் ஆதனம் |
| மேற்கு | - | பிரதான வீதி |
| தெற்கு | - | சிவசுப்பிரமணியம் பெண் நாகேஸ்வரியின் ஆதனம் |

மேற்குறித்த ஆதனத்தை கந்தராசா துவாரகன் என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. ம. சக்தி அழுத்தம் காரணமாகவே மின்சார கட்டண அதிகரிப்பு நிறுத்தம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

கண்டி, ஒக். 16
மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தே அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் அழுத்தத்தால் மின் கட்டண அதிகரிப்புக்கான முயற்சி தோல்வியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகக் குறுகிய காலத்துக்குள் ஐக்கிய மக்கள் சக்தி மக்களுக்கு பாரிய பணிகளை ஆற்றியிருக்கிறது. அரசாங்கமும், மின்சார சபையும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க மின்சாரக் கட்டணத்தை 6.8 சதவீதத்தால் அதிகரிக்க முற்பட்டன. எனினும், இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக தற்போது அந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிராகரித்துள்ளது. எதிர்க்கட்சியின் வகிபாகம் என்பது ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் இருந்து பேச்சுவார்த்தை நடத்துவதல்ல. மாறாக மக்களுக்கு உண்மையான பொறுப்பை நிறைவேற்றுவதாகும். இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எடுத்த இந்த முடிவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தின் நியாயமற்ற மின்சாரக் கட்டண அதிகரிப்பு, ஐக்கிய மக்கள் சக்தியின் அழுத்தத்தின் காரணமாகவே நிறுத்தப்பட்டது. எதிர்வரும் நாட்களில் இந்த மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (எ)

# மலையக தோட்டப்பகுதி மக்களுக்கு வீடு, காணி உரிமைகளை வழங்கு

## ஹற்றனில் கையெழுத்து சேகரிப்பு


ஹற்றன், ஒக். 16
மலையக மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான தொழிற்சங்கம், ஹற்றன் பஸ் நிலையத்தில் நேற்று கையெழுத்து சேகரிப்பை மேற்கொண்டனர்.

இதன்மூலம், தோட்டப் பகுதி மக்களுக்கு வீடுகள் மற்றும் காணி உரிமைகளை வழங்குமாறும். மேலும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெருந்தோட்டப் பகுதியின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும் நிலத்துடன் கூடிய வீடுகளை வழங்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

இதில் தொழிற்சங்கத் தலைவர் சிவநேசன், பொதுச் செயலாளர் அழகமுத்து நந்தகுமார் உள்ளிட்ட பல தொழிற்சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சிவநேசன் கூறியதாவது:
"பெருந்தோட்டப் பகுதி மக்களுக்கு நிலம் மற்றும் வீடுகளை வழங்குவது மிகவும் அவசியமானது. இதன் மூலம் தோட்டப் பகுதி இளைஞர்கள் தனிக் குடும்பங்களாக உருவாகி நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் குடியேறி வணிகம், அரசு மற்றும் தனியார்த் துறைகளில் தங்கள் வாழ்க்கையை முன்னேற்றிக் கொள்ள முடியும்"- என்றார்.

நிலம் அல்லது வீடு இல்லாத பெரும்பான்மையான மக்களிடமிருந்து கையொப்பங்களைச் சேகரித்து, அவற்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதே இந்த முயற்சியின் பிரதான நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




# உளநல தினத்தையொட்டி விழிப்புணர்வு நடைபவனி

சம்மாந்துறை, ஒக். 16
உலக உளநல தினத்தையொட்டி அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை சூறா வித்தியாலய மாணவர்களால் நேற்று முன்தினம் விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது. (எ-08)

# முடிந்தால் அடிப்படை சம்பளத்தில் 10 ரூபாய் அதிகரித்து காட்டுங்கள்

## ஜனாதிபதிக்கு ஜீவன் சவால்

கொழும்பு, ஒக். 16
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2020 - 2024 காலப் பகுதியில் இரு சந்தர்ப்பங்களில் 250 மற்றும் 350 ரூபாய் சம்பள அதிகரிப்பை நாம் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம். எனவே, முடிந்தால் இவ்வாண்டு அடிப்படை சம்பளத்தில் 10 ரூபாயையேனும் அதிகரித்துக் காட்டுமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் ஜனாதிபதிக்கு சவால் விடுத்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க 1750 ரூபாய் நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். எமது ஆட்சிக் காலத்தில் சம்பள அதிகரிப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது எதிரணியிலிருந்த மலையகப் பிரதிநிதிகளால் எந்தவித ஒத்துழைப்புக்களும் வழங்கப்படவில்லை. மாறாக இடையூறுகளே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இந்த அரசாங்கம் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் நிச்சயம் நாம் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். கடந்த ஆண்டு இடம்பெற்ற சம்பள பேச்சுவார்த்தையின் போது 1750 ரூபாயை நாம் அடிப்படை சம்பளமாகக் கோரிய போது, ஜே.வி.பி. தொழிற்சங்கள் 2138 ரூபாயை அடிப்படை சம்பளமாகக் கோரின.

இதற்கமைய ஜே.வி.பி. தொழிற்சங்கம் இன்றும் 2138 ரூபாய் அடிப்படை சம்பளம் என்ற நிலைப்பாட்டில் உள்ளதா? அவ்வாறில்லை எனில் 1700 ரூபாய் நியாயமான சம்பளம் எனக் கூறுகின்றீர்களா? ஆரம்பத்தில் 1700 ரூபாய் அடிப்படை சம்பளம் எனக் கூறப்பட்ட போதிலும் தற்போது அதனை நாள் சம்பளம் என்றே குறிப்பிடுகின்றனர். அடிப்படை சம்பளத்தில் எந்தவித அதிகரிப்பும் இன்றி மேலதிகக் கொடுப்பனவுகளை அதிகரிப்பது எவ்வித பயனும் அற்றது. அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்பட்டால் அதற்கு ஆதரவளிப்போம். அவ்வாறில்லை எனில் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. சம்பள பேச்சுவார்த்தை குறித்து அரசாங்கத்துக்குள்ளேயே தெளிவற்ற நிலைப்பாடு காணப்படுகிறது.- என்றார். (எ)

# மரக்கறி விலை வீழ்ச்சி விவசாயிகள் பாதிப்பு

நுவரெலியா, ஒக். 16
நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி விலைகள் கடந்த சில நாட்களாகத் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருவதால் விவசாயிகள் கடுமையான நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக, கரட், லீக்ஸ், கோவா போன்ற மரக்கறிகள் கிலோ ஒன்றுக்கு 70 முதல் 90 ரூபாய் வரை மட்டுமே விற்பனையாகின்றன.

இதனால், உற்பத்திச் செலவைக்கூட ஈடுசெய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நுவரெலியாவில் உள்ள பொருளாதார மையங்களின் முதலாளிகள், உள்ளூர் விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளை வாங்குவதற்குப் பதிலாக, ஊவா மாகாணத்துக்குச் சென்று அங்குள்ள விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளை மலிவாகக் கொள்முதல் செய்கின்றனர்.

இதனால், நுவரெலியா விவசாயிகளின் மரக்கறிகள் விற்பனையாகாமல், நீண்ட காலத்துக்கு நிலத்தில் வைத்திருக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதனால், மரக்கறிகள் அழிந்து போகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

மேலும், உரம் மற்றும் மருந்து போன்றவற்றின் விலை அதிகரித்துள்ள நிலையில், மரக்கறிகளின் விலை குறைவதால் விவசாயிகள் மிகுந்த நட்டத்தைச் சந்திக்கின்றனர்.

மேலும், நுவரெலியாவில் தொடர்ந்து பயிரிடப்படும் மரக்கறி வகைகளுக்கு, கீழ்மட்டப் பிரதேசங்களில் உள்ள வயல்களில் இதே பயிர்கள் உற்பத்தி செய்யப்படுவதால், மரக்கறிகளுக்கான தேவை குறைந்து, உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதுவும் விலை வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக உள்ளது. இந்தப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வை அரசு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் 7ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு

திருகோணமலை, ஒக். 16
கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் 7ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு எதிர்வரும் 23ஆம் திகதி காலை 08. 00 மணிக்கு பல்கலைக்கழக தொடர்பாடல் மற்றும் வணிக கற்கைகள் பீட கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த மாநாடு தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் திருகோணமலை வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஏற்பாட்டுக் குழுவின் சார்பாக திருகோணமலை வளாகத்தின் முதல்வர் கே.ரி.சுந்தரேசன், சிரேஷ்ட விரிவுரையாளர்களான இசார் அலி, தனுஷியா, மிதுரேந்தரன், ஜெனிஸ்டன், ஜெனிட்டா, புஸ்பிகா கனேகொட ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

குறித்த 7ஆவது சர்வதேச ஆய்வு மாநாடானது தன்னிறைவு வாய்ந்த சூழல், நீதி - சமுதாயம் வழியாக அமைதியாக அடைவோம், பண்பாட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களை இணைப்போம் என்ற தலைப்பின் கீழ் நடத்தப்படவுள்ளது. இதற்கான பிரதான பங்களிப்பை இந்தியாவில் உள்ள மரிட்டன் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது.

இதனை முன்னிட்டு லண்டன், பாகிஸ்தான், அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகள் புத்தகத்தினூடாக வெளியிடப்படவுள்ளது.

அத்துடன் குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தர் டெரன்ஸ் முஜ்தின் மற்றும் இந்திய மரிட்டன் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின்கீழ் அனுப்பப்பட்ட ரமேஸ் கனகந்தே ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதி பெறாத...

மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரி யங்கள் குறித்தும் வறிய மக்களை ஏப்பமிடும் நுண் நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்துவது அவசியம் என்றும் வலியுறுத்தி உறுப்பினர் அனுசியா ஜெயகாந்தினால் முன்மொழிவொன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த முன்மொழிவில், வறிய மக்களின் இலக்குவைத்து அதிக வட்டி வீதங்களுடன் பல நுண் நிறுவனங்கள் கண்கவர் பரப்புரைகள் மூலம் பிரதேசத்துள் உள் நுழைந்து ஏழை மக்களை அதன் பொறிக்குள் வீழ்த்தி ஏமாற்றி ஏப்பமிட்டு வருகின்றன.

இந்த விளம்பரங்களால் எமது பிரதேச மக்கள் நிதிக்கான அவசர தேவை கருதி அதிகூடிய வடிகளுக்கு நிதியை பெற்றுக்கொள்கின்றனர்.அதன்பின்னர் குறித்த கடனை செலுத்துவதில் பெரும் இடர்களை சந்திகின்றனர். இதனால் மீளவும் நிதி கட்டத்தவறும் கடனாளிகள் வீடுகளுக்கு நேரகாலம். பாரது நிதி வசூலிக்கும் நபர்கள் சென்று பெரும் தொல்லை கொடுக்கும் நிலை உருவாகின்றது. அத்துடன் கடன் பெற்றவர்களுக்கு மிக அழுத்தங்களை வசூலிப்போர் கொடுக்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

குறிப்பாக பெண் தலைமை குடும்பம் இக்கடனை பெற்றிருந்தால் குறித்த பெண்களுடன் தவறான முறையில் நடந்து கொள்ள சில வசூலிப்பாளர்கள் முயற்சிப்பது மட்டுமல்லாது அதற்கான மன அழுத்தங்களையும் கொடுக்கின்றனர்.

இதனால் தற்கொலை முயற்சிக்கு கடனாளர்கள் செல்லும் துர்ப்பாக்கிய நிலை உருவாக்கப்படுகின்றது.

எனவே எமது பிரதேச மக்களது வறுமையை குறித்த நிறுவனங்கள் தமக்கான முதலீட்டு இடங்களாக பயன்படுத்துவதற்கு எமது சபை அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தினார்.

முன்மொழிவின் அவசியம் கருதி அதை வழிமொழிந்து உரையாற்றிய உறுப்பினர் சு.பிரகலாதன், சட்ட விதிகளை பேணாது எமது பகுதிக்குள் 40 இற்கும் அதிகமான நுண்கடன் நிறுவனங்கள் நுழைந்து மக்களுக்கு கடும் குடைச்சலை கொடுக்கின்றன. இந்த நிறுவனங்களில் பல பதிவுகள் அற்றவையாக இருக்கின்றன.

அத்துடன் இந்த நிறுவனங்களின் பாதிப்பு எமது மக்களுக்கு அதிகமாக வருகின்றது. இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம் - என்றார்.

இது குறித்து உறுப்பினர் நாவலன் கூறுகையில்-

எமது மக்களின் உழைப்பை உறிஞ்சும் இந்த நிறுவனங்களை சபை ஊடாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் இனிவருங் காலத்தில் மக்கள் நுண் நிதி நிறுவனங்களை நாடாதிருக்க விழிப்புணர்வுகளை மக்களிடம் கொண்டு செல்ல நடவடிக்கை எடுப்பதும் அவசியம். சில பிரதேச சபைகள் நுண் நிதி நிறுவனங்கள் தமது ஆளுகைக்குள் செல்வதையே தடை செய்துள்ளன. அதுபோன்று எமது சபையும் நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் தெரிவித்தார்.

குறித்த விவாதத்தில் மற்றொரு உறுபினர் பார்த்தீபன் குறிப்பிடுகையில் - மக்கள் தமக்கான நிதியின் அவசிய தேவையை நிவர்த்திக்கவே இந்த நிறுவனங்களை நாடுகின்றனர். அதைத் தடுக்க நாம் எமது பிரதேசங்களிலில் உள்ள பொது அமைப்புக்கள் ஊடாக மக்கள் அவசர கடன் வசதி பெறக்கூடிய பொறிமுறையை உருவாக்கி இந்த பிரச்னைக்கு மாற்றீடாக தீர்வு கொடுக்கலாம். அது தொடர்பில் தனது வட்டத்தில் ஒரு கட்டமைப்பை சட்டரீதியாக உருவாக்கி வருவதாகவும் கூறினார்.

இதனிடையே மற்றொரு உறுபினரான இதயதீபன், இந்த நுண் கடன் தொல்லையால் சில நாள்களுக்கு முன்னர் தனது கிராமத்தில் ஒருவர் தற் கொலை செய்துகொண்டதாக சுட்டிக் காட்டியதுடன், சமுர்த்தி வங்கி கள் போன்ற அமைபுகள் மக்களுக்கு இலகு வான முறையில் கடன் வசதிகளை பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்வது அவசியம் என்றும் வலியுறுத்தினார்

குறித்த முன்மொழிவு குறித்து சபையின் தவிசாளர் அசோக்குமார் -

சபையின் அனுமதி பெறாது எந்தவொரு நுண் நிதி நிறுவனமும் உள் நுழைய முடியாது. மாறாக நியாயமான வட்டி வீதங்களுடன் பிரதேச சபையின் நியமங்களை ஏற்று சபையின் அனுமதி பெற்றே செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

அவ்வாறு சபையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாத நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதில்லை என்று கூறியதுடன் குறித்த முன்மொழிவு ஏக மனதாக தீர்மானமாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சுன்னாகம்...

விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இந்த இடமாற்றத்திற்கு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்படும் இருவரும் விரைவில் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் என அறியமுடிகிறது. (அ)

## மனுஷ...

மனுஷ நாணயக்கார, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்றுக் காலை முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது மனுஷ நாணயக்கார இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட மனுஷ நாணயக்காரவை நீதிமன்றில் ஆஜர்படுத்த இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது. அவர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. (அ)

## மூன்றாவது...

இதன்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டது.

பின்னர் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் என அனைவரும் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

பின்னர் அதிகாரிகள் அனைவரும் கலந்துரையாடல் முடிந்து வெளியேறினர். இறுதியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் வெளியேறியபோது போராட்டக்காரர்கள் அவரை வழிமறித்தபோது, ஆளுநர் செயலகம் உத்தியோகபூர்வ அறிவிப்பு வழங்கும் என்று போராட்டக்காரர்களுக்கு கூறிவிட்டுச் சென்றார்.

பின்னர் ஆளுநர் செயலகத்தில் அதிகாரிகள் எவரும் இல்லை என்றும், தாங்கள் உள்ளே சென்று பார்க்கவேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் ஆளுநர் செயலகத்துக்குள் செல்ல முயற்சித்தவேளை பொலிஸார் அவர்களை வழிமறித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் ஆளுநரின் செயலாளர், ஜோசப் ஸ்டாலின் உட்பட சிலரை அழைத்து கலந்துரையாடினார். இடமாற்றத்தின் அடிப்படையில் செயற்படுங்கள் என ஆளுநரின் செயலாளர் கூறியதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். அத்துடன் நாடளாவிய ரீதியாக இதற்கு எதிர்ப்பு வெளியிடப்படும் எனவும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (அ)

# இஷாரா செவ்வந்தி குழுவினர் கொழும்புக்கு வந்து சேர்ந்தனர்

கொழும்பு, ஒக். 16

பிரபல பாதாள உலகத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பில் நேபாளத்தில் கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தி மற்றும் அவரது குழுவினர் நேற்று புதன்கிழமை கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்களை மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.



அழைத்து வரப்பட்ட சந்தேகநபர்களில் இஷாரா செவ்வந்தி, ஜே.கே. பாய், சுரேஷ் மற்றும் தக்ஷி ஆகியோர் அடங்கியுள்ளனர் எனவும், இவர்கள் அனைவரும் மேலதிக விசாரணைக்காக கொழும்பு குற்றப்பிரிவில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தனியாரின்...

சொந்தமான காணிகள் மற்றும் வீடுகளை கைப்பற்றி அமைக்கப்பட்டிருந்தது.

தமது காணிகள், வீடுகளில் இருந்து பொலிஸாரை வெளியேற்றி அவற்றை தம்மிடம் ஒப்படைக்குமாறு, யாழ். மாவட்ட நீதிமன்றில் கடந்த 2019ஆம் ஆண்டு காலப் பகுதியில் 07 உரிமையாளர்கள் வழக்கு தொடர்ந்தனர்.

வழக்கு விசாரணைகள் கடந்த 06 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி பொலிஸார் தனியார் காணிகள், வீடுகளை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைத்துவிட்டு, வெளியேற வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதிமன்றம் தீர்ப்பளித்து 2 மாதங்களுக்கு மேலாகியும், பொலிஸார் காணிகள், வீடுகளை ஒப்படைக்காத நிலையில் நேற்று புதன்கிழமை நீதிமன்றப் பதிவாளரின் முன்னிலையில் பொலிஸார் அவ்விடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு உரிமையாளர்களிடம் காணிகள், வீடுகள் கையளிக்கப்பட்டன.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமது காணிகள், வீடுகளை இழந்து வாடகை வீடுகளில் தங்கியிருந்தவர்கள் தற்போது சொந்த காணிகள் , வீடுகள் கிடைத்தமை பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (அ)

## அம்பாந்தோட்டை...

இதன்ன உறுதிப்படுத்திள்ளார்.

3.7 பில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் திட்டம், செயற்பாட்டுக்கு வந்ததன் பின்னர் நாளொன்றில் 200,000 பீப்பாய்கள் வரை உற்பத்தியைத் தரக்கூடியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் அதன் அமுலாக்கத்துடன் தொடர்புடைய தீர்க்கப்படாத சிக்கல்களைப் பற்றி கலந்துரையாட ல்வ் லியாங்கோங் தலைமையிலான 10 பேர் கொண்ட சீனக் குழு இலங்கை வந்துள்ளது.

அமைச்சர் விஜித ஹேரத்தின் ஆதரவு பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த சவால்களைத் தீர்க்க உதவியதாகவும், இதன் விளைவாகவே திட்ட ஒப்பந்தம் ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டதாகவும் ல்வ் லியாங்கோங் குறிப்பிட்டார்.

எஞ்சியுள்ள பிரச்னைகளை அவர் அமைச்சரிடம் எடுத்துரைத்ததுடன், இரு நாடுகளுக்கும் இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு விரைவான தீர்வை வழங்குமாறு அமைச்சர் தலையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதன்போது, வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தை வலியுறுத்திய அமைச்சர் விஜித ஹேரத், நிலுவையில் உள்ள சிக்கல்களைத் தாமதமின்றித் தீர்ப்பதற்குத் தனிப்பட்ட முறையில் தலையிடுவதாக உறுதியளித்தார். (அ)

## பிரதமர்...

பிரதமர் தனது விஜயத்தின்போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனும் உயர் மட்ட பிரதிநிதிகளுடனும் சில கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

நாளை என்.டி.ரி.வி மற்றும் சிந்தன் ஆராய்ச்சி அறக்கட்டளை ஏற்பாடு செய்யும் என்.டி.ரி.வி உலக உச்சி மாநாட்டில், "நிச்சயமற்ற காலங்களில் ஏற்படும் மாற்றங்களை வழிநடத்துதல்" என்ற தலைப்பில் பிரதமர் சிறப்புரையாற்றவுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## இடமாற்றத்தால்...

குழுவால் ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு மேன்முறையீடும் உரிய முறையில் தனித்தனியாக ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான மேன்முறையீடுக் குழுவால் உரிய நிவாரணம் தமக்கு கிடைக்கப்பெறவில்லை எனக் கருதுவும் எந்தவொரு ஆசிரியரும் முறையே மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு, ஆளுநருக்கு மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என்ற விடயமும் கலந்துரையாடப்பட்டது. (அ)

## வட மாகாண....

இந்தக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சி.வேந்தன் உள்ளிட்ட முக்கிய கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அடுத்த வருடம் அளவில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் கூறியுள்ள நிலையில், அது தொடர்பில் கட்சிகளின் நிலைப்பாடு எவ்வாறு காணப்படுகின்றது. இந்த தேர்தலில் வெற்றி பெறுவது எப்படி என்பன தொடர்பில் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தலைமையில் இந்தக் கூட்டம் இரண்டு மணித்தியாலம் இடம் பெற்றது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் இந்தக் கூட்டத்தில் கலந்முகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அதன் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் சுகயீனம் காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## தனியார் துறையின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, ஒக். 16

2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்துக்கமைய, அரச துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு இணையாகத் தனியார் துறை ஊழியர்களுக்கும் தேசிய குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதன்படி, 2025 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச வேதன (திருத்தச்) சட்டம், 2025 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, வேலையாட்களின் வரவு - செலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம், மற்றும் 2025 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஊழியர்களின் வரவு - செலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம் ஆகியன 2025.04.01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 2025.07.22 ஆம் திகதி பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கமைய 2025.04.01 ஆம் திகதி முதல் மாதாந்த தேசிய குறைந்தபட்ச சம்பளம் 17,500 ரூபாயிலிருந்து 27,000 ரூபாய் வரை அதிகரிக்கப்படுவதுடன், 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் மாதாந்த தேசிய குறைந்தபட்ச வேதனம் 30,000 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

இவ்வாறு அதிகரிக்கப்பட்ட மாதாந்த குறைந்தபட்ச சம்பளமானது, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, மேலதிக நேரக் கொடுப்பனவு, பணிக்கொடை, மகப்பேற்றுக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு போன்ற அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## விசேட சுற்றிவளைப்பில் மேலும் 4,626 பேர் கைது

கொழும்பு, ஒக். 16

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4,626 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பில் 19 பேரும் சந்தேகத்தின் பேரில் 601 பேரும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 242 பேரும் திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 160 பேரும் மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 22 சாரதிகளும் கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 18 சாரதிகளும் ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3,564 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

# அமைச்சரவை மறுசீரமைப்புக்கும் கொள்கலனுக்கும் தொடர்பில்லை

### அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஒக். 16

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தீர்மானத்துக்கமைய கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்புக்கும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் சுங்கத்துறையால் சர்ச்சைக்குரிய வகையில் 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகளுக்கும் தொடர்பிருப்பதாக முன்வைக்கப்படும் கூற்றை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நிராகரித்தார்.**

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் அமைச்சுப் பொறுப்பு மாற்றப்பட்டது குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விவகாரம் மற்றும் அதுபோன்று கடந்த காலத்தில் இடம்பெற்ற 14 சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் சுதந்திரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவற்றுக்கும் அண்மைய அமைச்சரவை மாற்றங்களுக்கும் தொடர்பு இல்லை என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

கடந்த ஒரு வருட காலமாக, நாம் இந்த அமைச்சுக்களை நிர்வகித்து வருவதால், அவற்றின் செயல்பாடுகள் குறித்து இப்போது எங்களிடம் தெளிவான புரிதல் உள்ளது. அதற்கேற்ப அரசாங்கம் இப்போது அதன் வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரித்து, அதன் கொள்கைகள் மற்றும் வியூகங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு, இந்த பரந்த மறுசீரமைப்பு முயற்சியின் ஒரு பகுதியாகும் எனக் குறிப்பிட்ட அவர், இலக்குகளைக் கொண்ட சில அமைச்சுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு, நிர்வாகத் திறனை மேம்படுத்த பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். (எ)

## ரிஷாட் பதியுதீனுக்கு எதிரான வில்பத்து வழக்கு தள்ளுபடி!

கொழும்பு, ஒக். 16

வட மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் 2018ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு எதிராக, நாகலந்த கொடித்துவக்கு மற்றும் மலிந்த செனவிரத்ன ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஏழு ஆண்டுகளாக நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இந்த வழக்கில் பலமுறை நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டதன் பின்னரும் வழக்குத் தாக்கல் செய்தவர்கள் நடைமுறைப்படி வழக்கை முன்னெடுக்காமையால் தீர்ப்பின்றி நீடித்து இவ்வழக்கு கொண்டுசெல்லப்பட்டது.

இந்த வழக்குக்கு சட்ட அடிப்படை எதுவும் இல்லை என்றும், உண்மையான சட்ட காரணங்களுக்காக அல்லாமல் ஊடக கவனத்தை பெறுவதற்காகவே தொடரப்பட்டதாக முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் வாதிட்டார்.

மேலும் மனுதாரர்கள் தொடர்ந்து வழக்கை முன்னெடுக்கத் தவறியதால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கோரியிருந்த நிலையில், அந்த சமர்ப்பிப்புக்கு இணங்க, நேற்று மேல்முறையீட்டு நீதிமன்றம் இவ் ரிட் மனுவை தள்ளுபடி செய்தது. (எ)

## போதைப்பொருள் தடுப்பு பிரிவு பணிப்பாளருக்கு இடமாற்றம்!

கொழும்பு, ஒக். 16

தெற்கு கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த, நாட்டின் வரலாற்றிலேயே மிகப்பெரிய போதைப்பொருள் தொகையை கைப்பற்றுவதற்கு தகவல் வழங்கிய, பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் ஹேமால் பிரசாந்தவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் பொலிஸ் களப் படைத் தலைமையகத்தின் பதில் கட்டளை அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இடமாற்றத்துக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

தனது 31 வருட கால சேவையில் அவர் மீது எந்தவித ஊழல் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர் சுமார் இரண்டு வருடங்களாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றி வந்தார்.

அவரது பதவிக் காலத்தில் சுமார் இரண்டு தொன் போதைப்பொருள், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டமை விசேட அம்சமாகும்.

பாரியளவில் போதைப்பொருள் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவதைத் தடுக்கும் நோக்கில், கிளீன் சிறீலங்கா" வேலைத் திட்டத்துக்கு இணையாக, மீனவப் படகு உரிமையாளர்கள், படகோட்டிகள் (ஸ்கிப்பர்கள்) மற்றும் உதவியாளர்களை தெளிவூட்டும் பல நிகழ்ச்சித் திட்டங்களை ஹேமால் பிரசாந்த நாடளாவிய ரீதியில் முன்னெடுத்திருந்தார்.

இதன் காரணமாக, தென்பகுதி படகோட்டிகள் பெருமளவில் போதைப்பொருளை கரைக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், கடற்படையினரால் ஆழ்கடலில் கைப்பற்றப்பட்ட மேலும் பல படகுகள் விரைவில் கரைக்கு கொண்டுவரப்படவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

அவர் வழங்கிய தகவல்களையடுத்து கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே, தெற்கு கடற்கரைக்கு அப்பால் கடலில் மிதந்து கொண்டிருந்த 50 பொதிகளில் இருந்து 839 கிலோ கிராம் நிறையுடைய போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன.

அந்த பொதிகளில் 670 கிலோகிராம் "ஐஸ்", 156 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் சுமார் 12 கிலோகிராம் ஹஷீஷ் என்பன அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை, பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரன்மல் கொடித்துவக்கு ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. (எ)

# சிவப்பு அறிவித்தல்: 40 பேரில் 18 பேர் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர்

கொழும்பு, ஒக். 16

இலங்கையின் விசேட பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட சந்தேகநபர்கள் விரைவில் நாட்டுக்கு அழைத்துவரப்படுவர். சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 40 சந்தேகநபர்களில் 18 பேர் இதுவரை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சர் எப்.யூ.வூட்லர் தெரிவித்தார்.

மேலும், திட்டமிட்ட குற்றச் செயல்களால் சேகரிக்கப்பட்ட 140 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான தங்கம் மற்றும் பணம் உள்ளிட்ட சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றத்தை உதாசீனப்படுத்தும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் சந்தேகநபர்களை வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விசாரணைகளும், சர்வதேச சுற்றி வளைப்புக்களும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பிரதிபலனாக இதுவரையில் 40 சந்தேகநபர்களுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இவ்வாண்டுக்குள் 18 சந்தேகநபர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி கொழும்பு - புதுக்கடை நீதிமன்ற கட்டடத்துக்குள் கணேமுல்ல சஞ்சீவ என்ற சந்தேகநபர் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். எனினும், பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி தேடப்பட்டு வந்த நிலையில், நேபாளத்தில் இலங்கையின் விசேட பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார். இஷாரா செவ்வந்தியுடன் மேலும் ஒரு பெண் உள்ளிட்ட 5 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org